# Special Issue

# International Conference on Literature and Literary Principles in Naicker Period

(நாயக்கர்கால இலக்கியங்களும் இலக்கியக் கொள்கைகளும்)

Organized by

Department of Tamil,

Sri S. Ramasamy Naidu Memorial College

Sattur, on 27.07.2022

in collaboration with


International Research Journal of Tamil

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

(UGC Care Approved & MLA Indexed Journal)

# Guest Editors Message





மனிதர்களாகப் பிறந்தவர்களின் இயல்பு மற்றவர்களோடு சேர்ந்து வாழ்வதாகும். இயற்கையாகவே கூடி வாழும் பண்பு மக்களிடம் அமைந்திருக்கிறது. ஒரே விதமான சூழல், உணர்வு, நோக்கம், பண்பாடு, பழக்கவழக்கம் ஆகியவற்றால் ஒன்றுபடுகின்ற மக்கள் தொகுதியைச் சமூகம் அல்லது சமுதாயம் எனலாம். 12 - ஆம் நூற்றாண்டில் தோன்றிய விசயநகரப் பேரரசிற்குப் பின் செஞ்சி, மதுரை, தஞ்சை ஆகிய நகரங்களைத் தலைமையிடமாகக் கொண்டு கி.பி.1532 - ல் நாயக்கர் ஆட்சி தொடங்கியது இம்மன்னராட்சிக் காலத்தில் தான் தெலுங்கு மொழியினை மிகுதியாகப் பேசும் சமுதாயம் அதிகமாகத் தலைப்பட்டது எனலாம். தமிழிலக்கியம் குறிப்பிடும் இலக்கியங்களுள் ஒன்றான சிற்றிலக்கிய வகைகள் பல பக்தி இலக்கிய காலத்தில் தோற்றம் பெற்றாலும் அவை செழித்து வளர்ந்த காலம் நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்திலேயாகும். கி.பி 16 - 17 ம் நூற்றாண்டுகளில் தான் சிற்றிலக்கியங்கள் அதிகளவில் எழுதப்பட்டன. இவ்விலக்கியம் ஓரளவு தமிழகத்தின் வரலாற்றினை அறிய பயன்படுகின்றது. மேலும் பழங்கால மக்களின் சமுதாய நிலையினையும் எடுத்துரைக்கும் முகமாக அவை அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடற்குரியதாகும் மனிதனது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாக விளங்கும் இவை சிற்றின்பத்தையும் பேரின்பத்தையும் பாடுபொருளாகக் கொண்டு இறைவன், அரசன், வள்ளல், ஆசியரின் ஆகியோரின் சிறப்பினை எடுத்துரைக்கும் வகையினதாக எழுதப்பட்டுள்ளன. பன்னெடுங்காலமாகப் பெரும்பான்மையோரது பேச்சிலும், எழுத்திலும் உலா வரும் நாயக்கர் கால இலக்கியங்களின் பன்முகத் தன்மையினையும் அதன் சிறப்புகளையும் உலகறியச் செய்யும் வகையில் ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரியின் தமிழ்த்துறை, பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற சர்வதேசத் தமிழாய்விதழுடன் இணைந்து "நாயக்கர் கால இலக்கியங்களும் இலக்கியக் கொள்கைகளும்" என்னும் பொருண்மையிலான இக்கருத்தரங்கினை நடத்தியது. இதனடிப்படையில் பல்வேறு காலக்கட்டங்களில் தோன்றிய சிற்றிலக்கியங்களின் வகைகளையும் அதன் போக்குகளையும் வெளிப்படுத்தும் வகையில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளைக் கொண்ட இத்தொகுப்பு நாயக்கர் காலத்து இலக்கியங்களைப் பிரதிபரபலிக்கும். இக்கருத்தரங்க நூல் வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்த எம் கல்லூரி நிர்வாகிகள், எம் கல்லூரி முதல்வர் முனைவர் சே.கணேஷ்ராம் அவர்கள், எம் துறைத் தலைவர் மற்றும் எம் துறைப் பேராசிரியர்கள், சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் ஆசிரியர் முனைவர் ர.சுரேஷ் அவர்கள், பதிப்பகத்தார் மற்றும் கட்டுரையாளர்கள் அனைவருக்கும் நனி நன்றிகள் பல



**முனைவர் பொ.கோகிலா**
(கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்)

**Dr. P. Kokila**
**Guest Editor cum Conference Convenor**



**திருமதி அ.முருகலெட்சுமி**
(கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்)

**Mrs. A. Murugalakshmi**
**Guest Editor cum Conference Convenor**